| O.S.No.310/2022 | PW1: திரு. வீராசாமி<br>த/பெ. திரு. பலராம கவுண்டர் | 28-01-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>கூடுதல் முதல் விசாரணையின் பேரில் 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. வா.சா.ஆ.14 கிரைய பத்திரத்தில் கண்டுள்ள சொத்தினை யாரிடமிருந்து கிரையம் வாங்கினேன் என்றால் முனியம்மாள் என்பவரிடம் கிரையம் வாங்கினேன். அந்த சொத்தின் பழைய சர்வே எண். 206/1B, புதிய சர்வே எண். 298/37 ஆகும். சர்வே எண். 206/1B–ன் புதிய சர்வே எண். 298/37 என்பதற்கு ஆதாரமாக ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.14–ல் கண்டுள்ள சொத்தானது புளியாத்தம்மன் கோயில் தெருவுக்கு கிழக்கே, அண்ணாமலை என்பவருக்கு சொந்தமான வீட்டு மனைக்கு மேற்கே, பொதுவழிக்கு தெற்கே, சர்வே எண். 298/40–க்கு வடக்கே அமைந்துள்ளது.

2. வருவாய்த்துறை ஆவணங்கள் படி பொதுவழியானது சர்வே எண். 298/36 என்று வரையறை செய்யப்பட்டுள்ளது. அந்த பொதுவழிக்கு வடக்கேதான் சர்வே எண். 298/34 அமைந்துள்ளது. சர்வே எண். 298/34 ஐத்தான் பிரதிவாதிகள் பொதுவழி என்று சொல்லி உரிமை கொண்டாடுகின்றார்கள் என்றால் சரிதான், அதில் பாதிதான் பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது. சர்வே எண். 298/34க்கு வடக்கே களத்துமேட்டுத் தெரு அமைந்துள்ளது. வா.சா.ஆ.14 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த புளியாத்தம்மன் கோயில் தெருதான் தற்போது களத்துமேட்டுத்தெரு என்று சொல்லப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல.

3. புளியாத்தம்மன் கோயில் தெரு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி மீண்டும் தெற்கு நோக்கி வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.14 எனது வழக்கினை ஊர்ஜிதம் செய்வதற்கான ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கினை குழப்பவேண்டும் என்பதற்காக வா.சா.ஆ.14 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.14, வா.சா.ஆ.15 ஆவணங்கள் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றாலும், அதனை வைத்து நான் எவ்வித உரிமையும் கோரமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்து சம்மந்தமாக புல வரைபடம் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த வரைபடமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.28 16:14:57 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**